**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஏராள மான கேசரி பருப்பு எங்கே வந்து, எங்கே அடல்டரேட் செய்கிறார்கள் என்பது உறுப்பினருக்குத் தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால், ஏன் அவர் அதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வில்லை?

**திரு. என். கே. பழனிசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் கேள்வி கேட்கிறேன், எதிர்க் கேள்வி போடலாமா...

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, என்னுடைய நோக்கம் கேள்விக்கு எதிர் கேள்வி போடவேண்டு மென்பதல்ல, நிலைமை விளக்கம் பெறுவதுதான்.

## தேசிய நெடுஞ்சாலைகள்

* 287 **வினா—திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் என்ன? 1967-க்குப் பின்னர் எவ்வளவு தூரம் தேசிய நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழ் நாட்டில் தற்பொழுது உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,852 கிலோ மீட்டர். 1967-க்குப் பின் 51 கிலோ மீட்டர் நீளமுள்ள பாளையங்கோட்டை-தூத்துக்குடி சாலை தேசிய நெடுஞ் சாலையோடு இணைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, பஸ் ரூட் செல்கிற எல்லா இடங்களையும் ஹைவேஸ் ரூட்டாக ஆக்க அரசு முடிவு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன். எல்லாம் நிதி நிலையைப் பொறுத்திருக்கிறது.

1975 மார்ச் 12]

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைக்கு மத்திய அரசாங்கம் சென்ற ஆண்டு, அதாவது ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பணம் கொடுத்து வருகிறது? அந்தப் பணத்தைத் திறமையாகப் பயன்படுத்துகிற காரணத்தினால் நமக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆனால், வேறு மாநிலங்களில் சரியாகப் பயன்படுத்தவில்லையென்றால், அதை நாம் உபயோகப் படுத்திக் கொள்ளலாம் எனப்படுகிறதே, அப்படி வேறு மாநிலங் களிடமிருந்து நாம் கேட்டு வாங்கி இருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தேசிய நெடுஞ்சாலைக்கு மத்திய அரசாங்கம் கொடுத்த பணம் பற்றிய புள்ளிவிவரம் தற்பொழுது என்னிடத்திலே இல்லை. மத்திய அரசாங்கம் வேறு மாநிலங்களில் செலவு செய்யாததை நாம் செலவு செய்து கொள்ளலாம் என்று சொல்வதாகச் சொல்வது சரியல்ல. அதற் கென்று ஒரு குறிப்பிட்ட அளவு பணம் ஒதுக்குகிறார்கள். என்ன பாதை என்று அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதிலே சில சிக்கல்கள் வருகின்றன. மானியக் கோரிக்கை வரும்போது அதைப் பற்றி மீண்டும் விவாதிக்கலாம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, இந்தத் தேசிய நெடுஞ் சாலையைப் பொறுத்தவரை நம்முடைய மாநில அரசுக்கு அதிலே இருக்கிற அதிகாரவரம்பு என்ன? பாதையின் குறுக்கே ஏதாவது குழாய் அமைக்க வேண்டும், கல்வெர்ட் அமைக்க வேண்டுமென்றால்கூட, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்ற சூழ்நிலையிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நமக் கிருக்கிற அதிகாரம், அதைப் பராமரிக்கின்ற அதிகாரம். அவர்கள் பணம் தருகிறார்கள். எந்த எந்த இடத்தைத் தேசிய நெடுஞ் சாலையாக எடுத்துக்கொள்வது என்பது மட்டுமல்ல, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு எந்த இடத்தைப் பராமரிக்க வேண்டுமென்பதையும் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதற்கு எஸ்டிமேட் தயாரிக்கச் சொல்கிறார்கள். அந்த எஸ்டிமேட் இங்கு தயாரிக்கப்பட்டு அங்கு போய் அப்ரூவாகி வரவேண்டும். அதற்குப் பிறகு டெண்டர் கேட்கிறோம். அந்த டெண்டர் அங்கு போய் அப்ரூவாகி வரவேண்டும். அதற்குப் பிறகு யார்

காண்ட்ராக்டர் என்று சொல்கிறார்கள். அந்த காண்ட்ராக்டரிடம் நாம் வேலை வாங்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் நாம் மத்திய அரசாங்கத்தின் ஏஜண்டுகளாக இருக்கிறோம். அதற்காக அவர்கள் தருவது, 7½ சதவிகிதம் ஏஜண்டு பணம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, சென்னை-நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள கல்வெர்ட்டுகள் கழிந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக உடைந்திருக்கின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளாகியும் அவற்றைச் சீரமைக்கும் வேலை முற்றுப் பெறவில்லை. அதற்குக் காரணம் என்னவென்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்னை-நாகர்கோவில் முழுவதும் எல்லா பாலங்களும் பழுது பார்க்கப்படாமல் அப்படியே கிடக்கின்றன என்று சொல்வது சரியல்ல. சில வற்றிற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது என்பது உண்மை. ஆனால், நான் சொன்ன இந்தக் காரணங்களைத் தவிர வேறு காரணங்கள் கிடையாது. விரைவிலே முடித்து விட வேண்டுமென்று நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன், கேட்டுக் கொண்டிருக்கிறேன். விரைவிலே முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஆகக்கூடிய செலவு அனைத்தையும் மத்திய சர்க்கார் தருகிறதா? அல்லது மாநில சர்க்காரும் அதில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்கிறதா? தூத்துக்குடியில் இருந்து மதுரை வரையில் உள்ள சாலை தேசிய நெடுஞ்சாலையில் சேர்ந் திருக்கிறதா? அல்லது திருநெல்வேலியில் இருந்து வரும் பாதை மட்டும்தான் சேருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அங்கத்தினர் சொல்கின்ற பாதை தேசிய நெடுஞ்சாலையில் சேர்க்கப்படவில்லை.

மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலைகளுக்கான பணத்தைக் கொடுத்து நிர்வாகச் செலவுக்காக 7½ சதவிகிதம் தான் கொடுக் கிறார்கள். ஆனால் நமக்கு கிட்டத்தட்ட 20 சதவிகிதம் செலவாகிறது. ஆகவே மிச்சம் இருக்கிற பணத்தை நாம்தான் செலவழிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

*1975 மார்ச் 12]*

**திரு. பி. பொன் சொக்கலிங்கம்:** தமிழ்நாட்டில் சிறப்பு மிக்க தேவாலயங்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்குச் செல்லும் சாலைகளை எல்லாம் தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நாம் பல சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் வற்புறுத்தி வருகிறோம். ஆயினும் கடந்த எட்டாண்டுகளில் அவர்கள் 51 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் தேசிய நெடுஞ்சாலையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நிறைய இடங்களைச் சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். இதுவரை பதில் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைக்கின்ற முகத்தான் சில இடங்களில் பைபாஸ் ரோடு போடும் திட்டம் இருந்ததே, அந்த பைபாஸ் ரோடுகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்தால் உடனடியாக அதைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பை பாஸ் ரோடுகள் போடப்படாமல் தேசிய நெடுஞ்சாலையை இடிக்கவோ, பாலத்தை இடிக்கவோ ஆரம்பிப்பதில்லை. பைபாஸ் ரோடுகளை முதலில் போட்டுவிட்டுத்தான் இந்த வேலைகள் நடைபெறுகின்றன.

### நெல்லை வட்டத்திலுள்ள குளங்கள்

* 288 **வினா—திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நெல்லை தாலுக்காவிலுள்ள (1) வேளார் குளம், (2) உற்பத்தியார் குளம் இவைகள் போதுமான தண்ணீர் நிரம்ப முடியாமல் தூர்ந்து மேடாகிவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவைகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்திச் சீர்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.